1991 சனவரி 22]

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களைப் போல கில்ட் ஆஃப் சர்வீஸ் மூலமாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களுக்குத் தமிழக அரசின் மூலம் ஏதேனும் சலுகைகள் வழங்கப்படுகின்றனவா? அப்படிப்பட்ட, கில்ட் ஆஃப் சர்வீஸ் மூலமாக நடத்தப்படுகிற அநாதை இல்லங்களுக்கு, தமிழக அரசின் மூலமாகப் பரிந்துரை செய்தால், அநாதைக் குழந்தைகளை எடுத்துக் கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவியுடன் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தின் உணவூட்டும் செலவினமாக ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் 90 ரூபாயை இந்த அரசு வழங்கி வருகிறது.

திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

*9775—**திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சட்ட விதிகளின்படி கட்டப்பட வேண்டிய ஒய்வு அறை, சாப்பாட்டுக் கூடம், கழிப்பறை ஆகியவை கட்டப்படாமலும், சட்டப்படியான வேலை நேரம் அனுசரிக்கப்படாமலும் உள்ள தொழிற்சாலை உரிமையாளர்கள்மீது அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சாதாரணமாக 150 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றும் தொழிற்சாலைகளில்தான் தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகளின்படி ஒய்வறை பராமரிக்கப்படவேண்டும். இச்சட்டப்படி ஒய்வறை பராமரிக்கப்படவேண்டிய தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ஏதும் திண்டுக்கல்லில் இல்லை. அனைத்துத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் கழிப்பறை வசதிகள் உள்ளன.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் தொழிற்சாலைகள் விதி 95-இன் கீழ் உள்ள ஷெட்யூல்-IX—இன்படி உணவருந்தும் அறை ஒன்று பராமரிக்கப்படவேண்டும். திண்டுக்கல் பகுதியில் தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் பதியப்பெற்ற 46 தொழிற்சாலைகளில் 36 தொழிற்சாலைகளில் உணவருந்தும் அறை பராமரிக்கப்

படுகிறது. உணவருந்தும் அறை அமைக்கப்படாத 10 தொழிற்சாலைகள் பேரில் ஆய்வு ஆணைகள் மற்றும் காரணம் காட்டும் அறிக்கை நிர்வாகத்தினருக்கு அனுப்ப நடவடிக்கை கோரப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவுகள் 51 மற்றும் 52 ஆகியவற்றிற்கு முரணான வேலைநேரம் அனுசரித்த ஒரு தொழிற்சாலையின்மீது வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றத்தினால் ரூ. 1,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் நவீன முறையில் ஏராளமாகக் கட்டப்பட்டு வருகின்ற இந்தக் காலத்தில் தொழிலாளர்களின் அடிப்படை நல உரிமைகளான, உணவருந்தும் அறை, குளியல் அறை, ஓய்வறை, கழிப்பறை போன்றவைகளைக் கட்டாமலேயே தொழிற்சாலைகளை நிர்மாணித்து விடுகிறார்கள். எனவே, தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும்படியான இந்த ஆரம்ப நடவடிக்கைகளை முடித்த பிறகுதான் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கும்படியான செயற்குறிப்பு ஏதேனும் தமிழக அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பி இருக்கிறார், பொதுப்படையாக தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை தொழிற்சாலைகளிலும் இதுபோல சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சின்னஞ்சிறார்கள் அதாவது சைல்ட் லேபரர்களை வைத்து ஏராளமான தொழிற்சாலைகளில் வேலை வாங்கப்பட்டு வருகிறது. இந்தக் கொடுமையைத் தடுக்கக் கூடிய முறையில், குழந்தைத் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குவதைத் தடுப்பதற்கு அரசிடம் ஏதேனும் குறிப்பான நடவடிக்கை உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறார்களையெல்லாம் வேலையில் அமர்த்துவதைத் தடுக்க வேண்டுமென்பதற்காக ஏற்கெனவே பல சட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குறிப்பிட்டு ஏதாவது ஒன்றிரண்டு சொல்வார்களேயானால், அதை ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசுக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீன் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்.

*9622—டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன் வளர்ப்புத் துறை, தனியார் மீன் வளர்ப்புப் பண்ணை அமைக்க அரசு நிலத்தைத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் (திருமதி) காஞ்சனா கமலநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆயிரம் கிலோமீட்டர் நீளத்திற்கு விரிந்து பரந்துள்ள தமிழகத்தின் கடற்கரையையொட்டி ஆயிரக் கணக்கான ஹெக்டேர் நிலத்தில் இறால் மீன் வளர்ப்பு நடைபெறு கிறது. அஃதன்னியில் உள் நிலப் பகுதிகளில் தண்ணீர் வசதி கிடைக்கக்கூடிய பகுதிகளில் மீன் வளர்ப்புப் பண்ணை, மீன் குஞ்சுப் பொறிப்புப் பண்ணை இவைகளை ஏற்படுத்தி, மீன் உற்பத்தியை மேம்படுத்த வருவாய்த் துறை, வனத் துறை, நீர் வரத்து அல்லாத ஓடை புறம்போக்கு நிலங்களை மீன் வளத் துறை மூலம் தனியாருக்குக் குத்தகை அடிப்படையில் ஒதுக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உள்நாட்டு மீன் வளர்ப்புப் பகுதி களில் மீன் பண்ணை அமைக்க அரசு நிலம் கொடுப்பதற்கான வாய்ப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

வெளிமாநிலங்களில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி கூட்டுறவு விற்பனை நிலையங்கள்.